**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 227/2022 |
| Deposition of Witness | : | PW–1 |
| Name | : | முத்துச்சாமி |
| Father Name | : | கருப்பணக்கவுண்டர் |
| Village | : | செங்காட்டுர் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 62 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.05.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது செங்காட்டுரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது அண்ணன் மகன். கடந்த சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணிக்கு நானும் எனது மனைவி சரஸ்வதியும் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு வந்து கேனக்கூதி மற்றும் அறுவருக்கத்தக்க வார்த்தையால் என்னை திட்டி விட்டு கைகளால் எனது முதுகில் குத்தியதில் நிலை தடுமாறி நான் கீழே விழுந்துவிட்டேன். பின்பு இரும்பு கம்பியை வைத்து ஆஜர் எதிரி எனது வலது கால் முழங்கால் மற்றும் இடது பக்க நெற்றியில் தாக்கியதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது சண்டையை விலக்கிவிட வந்த எனது மனைவி சரஸ்வதியை அவரது வலது தோள்பட்டையில் அதே கம்பியை வைத்து அடித்துவிட்டார். அதில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. பக்கத்து வீட்டில் இருந்த எனது மருமகன் காளிமுத்து சத்தம் கேட்டு ஓடி வந்தார் அவரும் சண்டையை விலக்க முயற்சித்தார் அவரையும் ஆஜர் எதிரி கம்பியால் இடது தோள்பட்டையில் தாக்கினார். பின்னிட்டு ஆஜர் எதிரி அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்துவிட்டு அவரது வீட்டிற்கு ஓடிவிட்டார். பின்னர் எனது இளைய மகள் சங்கீதா என்னை

சிகிச்சைக்காக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். பின்னர் எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் நாங்கள் சூரியா மருத்துவமனைக்கு சென்று மேல் சிகிச்சை எடுத்துகொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் வாக்குமூல புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **வாக்குமூல புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் இரும்பு கம்பி தான் ஆஜர் எதிரி எங்களை அடித்தற்கு பயன்படுத்தியதாகும். **இரும்பு கம்பி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் சட்டை தான் நான் சம்பவத்தின் போது அணிந்திருந்த இரத்தக்கரை படிந்த சட்டை ஆகும். அதை நான் தாராபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் ஆஜர் செய்தேன். மேற்படி **வெளிர் கத்திரி பூ நிற சட்டை சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் காணொலி வாயிலாக தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI — Digitally signed by D THENMOZHI Date: 2025.05.02 19:35:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 227/2022 |
| Deposition of Witness | : | PW–2 |
| Name | : | சரஸ்வதி |
| Husband Name | : | முத்துச்சாமி |
| Village | : | செங்காட்டூர் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 62 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.05.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்காட்டூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மச்சாண்டார் மகன். கடந்த சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணிக்கு நானும் எனது கணவர் முத்துச்சாமியும் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு வந்து அறுவருக்கத்தக்க வார்த்தையால் என்னையும் எனது கணவரையும் திட்டி விட்டு கைகளால் எனது கணவரின் முதுகில் குத்தியதில் அவர் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டார். பின்பு ஆஜர் எதிரி வைத்திருந்த இரும்பு கம்பியை வைத்து எனது கணவரின் வலது முழங்கால் மற்றும் இடது பக்க நெற்றியில் தாக்கியதில் எனது கணவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது சண்டையை விலக்கிவிட வந்த என்னையும் ஆஜர் எதிரி எனது வலது தோள்பட்டையில் அதே கம்பியை வைத்து அடித்ததில் எலும்பில் அடிபட்டு எனக்கு மொக்கை காயம் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த எனது மருமகன் காளிமுத்து சத்தம் கேட்டு ஓடி வந்தார் அவரும் சண்டையை விலக்க முயற்சித்தார் அவரையும் ஆஜர் எதிரி கம்பியால் இடது தோள்பட்டையில் தாக்கினார். பின்னிட்டு ஆஜர் எதிரி அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்துவிட்டு அவரது வீட்டிற்கு ஓடிவிட்டார். பின்னர்

எனது இளைய மகள் சங்கீதா என்னை சிகிச்சைக்காக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். பின்னர் எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் நாங்கள் சூரியா மருத்துவமனைக்கு சென்று மேல் சிகிச்சை எடுத்துகொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் இரும்பு கம்பியை வைத்து தான் ஆஜர் எதிரி என்னையும் எனது கணவரையும் எனது மருமகனையும் தாக்கினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் காணொலி வாயிலாக தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.05.02 19:35:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 227/2022 |
| Deposition of Witness | : | PW–3 |
| Name | : | சங்கீதா |
| Husband Name | : | காளிமுத்து |
| Village | : | குள்ளாயிபாளையம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 38 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.05.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது குள்ளாயிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது பெரியப்பா மகன். எனது பெரியப்பா பழனிச்சாமி ரூ. 600000/–ஐ எனது அப்பாவை கார்டியனாக வைத்து சங்கராண்டாம்பாளையத்தில் உள்ள கனரா வங்கி கணக்கில் போட்டு வைத்திருந்தார். பின்பு எனது பெரியப்பா இறந்துவிட்டார். பின்னிட்டு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மேற்படி தொகையை வங்கியில் இருந்து பெற்று ஆஜர் எதிரியிடம் எனது அப்பா கொடுத்துவிட்டார். அதற்கு பின்னிட்டும் வங்கியில் மேலும் தொகை உள்ளதாக கூறி ஆஜர் எதிரி என் அப்பா, அம்மாவிடம் பிரச்சனை செய்து வந்தார். கடந்த 26.02.2021ம் தேதி இரவு சுமார் 8.00 மணிக்கு என் அம்மா, அப்பா அவர்களது வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி மது அருந்திவிட்டு பிரச்சனை செய்வதாக என் அப்பா எங்களுக்கு தகவல் சொன்னார். நானும் எனது கணவரும் உடனே கிளம்பி எனது அப்பா வீட்டிற்கு சென்றுவிட்டோம். ஆஜர் எதிரியை நாங்கள் எதற்காக பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டபோது என்னையும் தேவிடியா தேவிடியா என்று திட்டி என் அப்பாவை கீழே தள்ளி கம்பியால் எனது அப்பாவின் வலது முழங்கால் மற்றும் இடது பக்க நெற்றியில் தாக்கியதில் எனது அப்பாவிற்கு

இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்போது சண்டையை விலக்கிவிட வந்த எனது அம்மாவையும் ஆஜர் எதிரி எனது அம்மாவின் வலது தோள்பட்டையில் அதே கம்பியை வைத்து அடித்ததில் அவருக்கு எலும்பில் அடிபட்டு மொக்கை காயம் ஏற்பட்டது. பக்கத்தில் இருந்த எனது கணவர் காளிமுத்து சண்டையை விலக்க முயற்சித்தார் அவரையும் ஆஜர் எதிரி கம்பியால் இடது தோள்பட்டையில் தாக்கினார். பின்னிட்டு ஆஜர் எதிரி அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்துவிட்டு அவரது வீட்டிற்கு ஓடிவிட்டார். பின்னர் நான் சங்கீதா 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி வரவழைத்து என் அப்பா அம்மா எனது கணவர் ஆகியோரை சிகிச்சைக்காக தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன். பின்பு கோவை கங்கா மருத்துவமனை சென்று எனது அப்பாவிற்கு ஸ்கேன் செய்துவிட்டு பின்பு தாராபுரம் சூரியா மருத்துவமனைக்கு வந்து மேல் சிகிச்சை எடுத்துகொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் காணொலி வாயிலாக தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.05.02 19:35:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்